II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 285/2020**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 22.04.2025

| | | | |
|---|---|---|---|
| Name | : Ramamoorthi | Age | : |
| Father's / Husband's Name | : | Village | : |
| Taluk | : | Distict | : |

<u>முதல் விசாரணை=</u>

என்னுடைய பெயர் ராமமூர்த்தி. நான் வழக்கின் வாதி. என்னுடைய பிரமாணப் பத்திரத்தினை இன்று தாக்கல் செய்கின்றேன். அதனை எனது முதல் விசாரணைச் சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அதில் உள்ள விவரங்கள் உண்மையானவை. பிரமாணப்பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களாக கீழே கண்ட ஆவணங்களை குறியீடு செய்யுமாறு வேண்டுகின்றேன்.

1. 09.09.2018 தேதியிட்ட செல்வம் இயற்றிக்கொடுத்த ரூ.10 லட்சத்திற்கான கடனுறுதி சீட்டு வா.த.சா.ஆ.1.
2. 29.09.2018 தேதியிட்ட செல்வம் இயற்றிக்கொடுத்த ரூ.2 லட்சத்திற்கான கடனுறுதி சீட்டு வா.த.சா.ஆ.2,
3. 14.10.2018 தேதியிட்ட செல்வம் இயற்றிக்கொடுத்த ரூ.5 லடசத்திற்கான கடனுறுதி சீட்டு வா.த.சா.ஆ.3.
4. 28.10.2018 தேதியிட்ட செல்வம் இயற்றிக்கொடுத்த ரூ.10 லடசத்திற்கான கடனுறுதி சீட்டு வா.த.சா.ஆ.4.
5. 16.09.2020 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு வா.த.சா.ஆ.5.
6. 2ம் பிரதிவாதி நந்தகுமார் அதனை பெற்றுக்கொண்தற்கான ஒப்புகை சீட்டு வா.த.சா.ஆ.6.

7. 1ம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு Refused என்று திருப்பப்பட்டதன் அஞ்சல் உறை வா.த.சா.ஆ.7.

8. 3ம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு Refused என்று திருப்பப்பட்டதன் அஞ்சல் உறை வா.த.சா.ஆ.8

9. 4ம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு Refused என்று திருப்பப்பட்டதன் அஞ்சல் உறை வா.த.சா.ஆ.9.

(வா.த.சா.ஆ.1 முதல் 4 வரையுள்ள ஆவணங்கள் எங்கு வைத்து Madeover செய்யப்பட்டது என்று குறிப்பு இல்லாததால் குறியீடு செய்யக்கூடாது என்று ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்பட்டது)

(அறிவார்ந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகின்றது)